# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 26 ஹிஜ்ரி 1436 ஜமாதுல் ஆஹிர் மார்ச் 2015

இலவசம்



# தேசத்தந்தை லீ குவான் இயூவுக்கு புகழஞ்சலி

# நாட்டுத் தந்தை லீ குவான் இயூவுக்கு முஸ்லிம் சமூகம் அஞ்சலி

நவீன சிங்கப்பூரின் தந்தை லீ குவான் இயூ அவர்கள் 91 வயதில் 23-3-2015 அன்று அமைதியாக உயிர்துறந்தார். நமது ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் அவருக்குப் புகழஞ்சலி செலுத்தியது.

முயிஸ், மெண்டாக்கி ஆகியவற்றுடன் சிங்கப்பூர் நாடாளுமன்ற நாயகர் ஹலீமா யாக்கூப், அமைச்சர்கள், சமூக, சங்கத் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் மறைந்த தலைவர் லீ குவான் இயூவுக்கு இரங்கல் தெரிவித்து வழங்கிய செய்திகளும், உரைகளும் சிறப்புக்குரியவை.

திரு. லீ குவான் இயூ திடமான நம்பிக்கை கொண்ட அரசியல்வாதி என்று திருவாட்டி ஹலீமா யாக்கூப் பாராட்டினார். “சிங்கப்பூர் பிறநாடுகளின் ஆட்சியின்கீழ் இருக்கக்கூடாது என்பதும் திறன் அடிப்படையிலான முன்னுரிமைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதுமே அவர் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கைகள். இவற்றை அவர் நிறைவேற்றினார். சிங்கப்பூரர்களின் நலனை தமது தலையாய கடமையாகக்கொண்டு செயல்திட்டங்களை அவர் மேற்கொண்டார்” என தமது உரையில் அவர் குறிப்பிட்டார்.

சிங்கப்பூர் முஸ்லிம்கள் சிறப்பாகச் செயல்படுவதற்கு திரு. லீ குவான் இயூ பெரிதும் உதவினார். முன்னேறிச்செல்லும் சிங்கப்பூரில் யாரும் பின்தங்கிவிடக் கூடாது என்பதில் அவர் அதிக அக்கறை செலுத்தினார் என்று முஸ்லிம் விவகாரங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்தார்.

“குறிப்பாக, சிறுபான்மைச் சமூகத்தினர் எவரும் பின்தங்கிவிடக் கூடாது என்பதில் திரு. லீ கண்ணும் கருத்துமாக இருந்தார். வெற்றி பெறுவதற்கான கொள்கைகளை நமது முஸ்லிம் மக்கள் புரிந்துகொண்டு வாழ்க்கையில் முன்னேறிச் செல்வதற்கான வழிமுறைகளைக் காட்டினார் அவர். அவ்வகையில் நமது சமூகம் அவர் காட்டிய வழியைப் பற்றிக்கொண்டு சாதித்துள்ளது எனக் கருதுகிறேன்” என்று அவர் குறிப்பிட்டார்.

“முஸ்லிம் சமூகத்திற்கு திரு. லீ ஆற்றிய அளப்பரிய பங்குகளில் முக்கியமானது பள்ளிவாசல் கட்டிட நிதி. இப்போது அந்த நிதி கட்டுமானம், மற்றும் மெண்டாக்கி நிதி என வழங்கப்படுகிறது. 1975ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அந்த நிதியின் உதவியாலும், மத்திய சேமநிதியின் மூலம் நன்கொடை வழங்குதன் மூலமாகவும் புதிய பள்ளிவாசல் களைக் கட்டுவதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது.

“அந்தக் காலகட்டத்தில் புதிய பேட்டைகளில் குடியேறும் முஸ்லிம்கள் செல்வதற்குப் பள்ளிவாசல்கள் இல்லாமல் இருந்தது. அரசாங்கத்தின் மத்திய சேமநிதி முறையைப் பயன்படுத்த அனுமதியளித்ததன் வழி திரு. லீ முஸ்லிம் சமூகத்திற்குப் பெரிய அளவில் உதவியிருக்கிறார். அன்றைக்கு அவரால் நிறுவப்பட்ட நிதிமுறை இன்றைக்கு முஸ்லிம் சமூகம் 23 புதிய தலைமுறை பள்ளிவாசல்களைக் கட்டிமுடிக்க வழி வகுத்துள்ளது” என்று தகவல் தொடர்பு அமைச்சருமான டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் தெரிவித்தார்.

மறைந்த தலைவர் திரு. லீ குவான் இயூ அவர்களுக்கு மலாய், முஸ்லிம் சமூகத்தினர் பல இடங்களில் இணைந்து இறுதி மரியாதை செலுத்தினர்.



மெண்டாக்கியும் மற்ற மலாய், முஸ்லிம் அமைப்புகளான சிங்கப்பூர் முஸ்லிம் மகளிர் சங்கம்-பிபிஜஎஸ், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் ஆகியவை தெலுக் ஆயர் ஹொங் லிம் கிரீன் சமூக மன்றத்தில் திரு. லீக்கு அஞ்சலி

செலுத்தின. அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் அனைவருக்குமே இது சிரமமான தருணம் என்று அப்போது கூறினார்.

முன்னாள் மூத்த கல்வி துணையமைச்சர் சித்தீக் சனீஃப் தமது இரங்கல் உரையில் பல நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்.

“திரு. லீ எதையும் தட்டிக்கழிக்கும் போக்குக்கு ஆளாகாதீர்கள் என்று சொல்வார். கல்வியில் கவனம் செலுத்துமாறு அறிவுரை கூறுவார். நம் பிள்ளைகள் நம் நாட்டின் நம்பிக்கைக்குரிய காப்பாளர்களாகத் திகழப் போவதை உறுதி செய்வது இதுவே என்று தீர்க்கமாகக் கூறினார். மெண்டாக்கி உருவாக முழு ஆதரவுதந்த திரு. லீக்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்” என்றார் அவர்.

கடையநல்லூர் முஸ்லிம் லீக், திரு. லீ குவான் இயூவின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் செய்தியை பிரதமருக்கு அனுப்பிவைத்தது. சிங்கப்பூரில் இந்திய முஸ்லிம் சமூகம் அளவில் சிறியதாக இருந்த போதிலும் அதற்கு திரு. லீ உரிய முன்னுரிமை வழங்கி தழைத்தோங்கச் செய்தார். மறைந்த மகானுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறோம் என்று சங்கத்தின் தலைவர் நசீர் கனியும், பொதுச்செயலாளர் மசூதும் அச்செய்தியில் குறிப்பிட்டனர்.

“சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீகின் பெயரைப் பிரதிபலிக்கும் கடையநல்லூர் ஸ்தீரீட் அமைந்துள்ளது. உமறுப்புலவர் தமிழ்ப் பள்ளி *1941*ல் அமைக்கப்பட்டது. ஹாஜி எம்.கே.ஏ. ஜப்பார் மூலம் தமிழ்பேசும் இந்திய




முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினரை திரு. லீ அறிமுகப்படுத்தினார். ஜப்பார் தமிழ் மொழியிலேயே நாடாளுமன்றத்தில் உரையாற்றுவார். இதுவும் இச்சமூகத்திற்குக் கிடைத்த பெருமை. திரு. லீ குவான் இயூவின் மறைவு பேரிழப்பு” என்று சங்கம் தெரிவித்தது.



ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்க சிங்கப்பூர் கிளையின் உறுப்பினர்கள், தெம்பனிஸ் குழுத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், உள்துறை மற்றும் வெளியுறவு அமைச்சின் மூத்த துணை அமைச்சருமான ஜனாப் மசகோஸ் ஜுல்கிஃபிலியுடன் இணைந்து, தெம்பனிஸ் வட்டாரத்தில் அமைக்கப்பட்டிருந்த அனுதாபக் கூடத்தில், *27-3-2015* அன்று, ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி, அவர்களின் இறுதி மரியாதையைத் தெரிவித்தனர்.

---

## நபி மொழி

ஒருவன் புனித ரமலான் நோன்பை அல்லாஹ்வுக்காக நன்மையை நாடியவனாக நோற்பானேயானால், அவன் முன் செய்த பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு விடுகின்றன என்று அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஆதாரம்: மிஷ்காத் நூல்

# குடும்பத் தினக் கொண்டாட்டங்கள்

## நாகூர் சங்கம்



நாகூர் சங்கத்தின் குடும்ப தின விழா பாசிர் ரிஸ் பார்க்கில் 19-4-2015 ஞாயிறு அன்று நடைபெற்றது. இவ்விழாவையொட்டி குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் பல விளையாட்டுப் போட்டிகளும், திருக்குர் ஆன் ஓதும் போட்டியும் இடம்பெற்றன.

சிறப்பு விருந்தினராக சுகாதாரம் மற்றும் போக்குவரத்து அமைச்சின் நாடாளுமன்றச் செயலாளர் துணைப் பேராசிரியர் டாக்டர் முஹம்மது ஃபைசல் இப்ராஹிம் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளையும், நிகழ்ச்சியின் ஆதரவாளர்களுக்கு நினைவுப் பரிசுகளையும் அவர் வழங்கிளார். முக்கிய விருந்தினர்களுக்கு சால்வையும் அணிவித்தார்.

தமிழகத்திலிருந்து வந்திருந்த கவிஞர் மு.மேத்தா சிறப்புரையாற்றினார். குடும்ப உறவுகளின் முக்கியத்துவத்தையும், நாகூரின் சிறப்புகளையும் அவர் எடுத்துரைத்தார்.

மஸ்ஜித் அப்துல் கஃபூர் தலைமை இமாம் மவுலவி உமர் ரில்வான் ஜமாலி திருக்குர்ஆன் போட்டியின் நடுவராக இருந்ததுடன், கருத்துரையும் வழங்கினார்.

அண்மையில் நம்மைவிட்டுப் பிரிந்த இசைமுரசு ஹாஜி நாகூர் ஹனீஃபா நினைவாக, அவர்கள் பாடிய "சின்னஞ் சிறு எழில் நாடு" என்ற சிங்கப்பூர் பற்றிய பாடலை "ஆன்மிக இசைத்தென்றல்" ஜனாப் ஜைனுல் ஆபிதீன் ஃபைஜி பாடினார்.

இவ்விழாவில், சிண்டாவின் தலைமை அதிகாரி திரு. பரதன், இஸ்லாமிய சமய மன்றத்தின் இயக்குநர்களில் ஒருவரான இம்ரான் பின் முஹம்மது, அதன் பொதுமேலாளர் நஸ்ரின், முஸ்தஃபா தமிழ் அறக்கட்டளை நிறுவனர் ஹாஜி முஸ்தஃபா, இந்திய முஸ்லிம் பேரவை தலைவர் ஃபரீஹுல்லாஹ், சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் தலைவர் நசீர் கனி, அதன் பொதுச் செயலாளர் மசூது, துணைத்தலைவர் ஜலாலுதீன், சிங்கப்பூர் இந்திய தூதரகத்தின் மூத்த அதிகாரி திரு. மாதேஸ்வரன், மஸ்ஜித் ஜாமியா சூலியா நிர்வாகக் குழு தலைவர் ஃபக்ருதீன், மூத்த எழுத்தாளர் ஜே.எம்.சாலிஹ், பேராசிரியர் அமானுல்லாஹ், கூத்தாநல்லூர் சலீம், கோம்பை அன்வர், பேராசிரியர் ரஃபீக், பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் நாகூரைச் சார்ந்த ஏராளமானோர் தமது குடும்பத்தினருடன் கலந்து கொண்டனர்.

விழாவின் நிறைவாக தங்க நாணயத்திற்கான அதிர்ஷ்ட குலுக்கல் நடந்தது. வருகையளித்த அனைவருக்கும் அன்பளிப்புப்பை வழங்கப்பட்டது.

## ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம்



திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), 15-3-

*2015 அன்று, காலை 10 மணி முதல், மாலை 6 மணி வரை, "சமய நல்லிணக்க குடும்பதின நிகழ்ச்சி" ஒன்றை, சிங்கப்பூர் (EAST COAST PARK) கிழக்கு கடற்கரைப் பூங்காவில் மிகச் சிறப்பாக நடத்தியது.*

ஒற்றுமையைப் பறைசாற்றும் வகையிலும், சமய நல்லிணக்கத்தை மேம்படுத்தி ஒன்றுபட்ட சமுதாயமாக வாழ்வதன் அவசியத்தை வலியுறுத்தியும் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில், மாணவ மாணவிகளுக்கான ஓவியப்போட்டி, மணலில் வீடுகட்டும் போட்டி, பெற்றோர்களுக்கான போட்டி போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. மதிய உணவும், தேநீர் விருந்தும், அதிர்ஷ்டக் குலுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட இக்குடும்பதின நிகழ்ச்சியில், சுமார் 200 பேர் கலந்து சிறப்பித்தனர்.

## முத்துப்பேட்டை அசோசியேஷன்




சிங்கப்பூர் முத்துப்பேட்டை அசோசியேஷன் 14-3-15 சனிக்கிழமை முற்பகல் செந்தோசா சிலாசோ கடற்கரையில் குடும்பதின ஒன்றுகூடல் நிகழ்ச்சியை நடத்தியது. 75க்கு மேற்பட்டவர்கள் குடும்ப சகிதமாய் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

தொடக்கமாக லுஹர் தொழுகையை கடற்காற்றுச் சூழலுடன் முடித்துக் கொண்ட அனைவருக்கும், ஊர்க் கலாச்சாரத்தை உணர்த்தும் வகையில் 5 கறி உணவு பகிர்ந்தளிக்கப்பட்டது. அதேசமயம் சிங்கப்பூர் முத்துப்பேட்டை அசோசியேஷன் துவக்க காலத்தில் (1959) பங்காற்றிய அல்ஹாஜ் V.A.H.துல்கர்னைன் அவர்களும், ராயல் பர்னிச்சர் உரிமையாளர் இமாம்தீன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

மேலும், இந்த ஒருங்கிணைப்பு கலந்துரையாடலில் மூத்த உறுப்பினர் டாக்டர் எஸ். தமீம்தீன், சங்கம் கடந்த 1999ல் அதிகாரபூர்வ அங்கீகாரம் செய்யப்பட்டது முதல் இன்று வரை மேற்கொள்ளப்பட்ட பணிகளை நினைவு கூர்ந்தார். மேலும் சவால்கள் வந்தால் எவ்வாறு எளிதாக செயல்பட வேண்டும் என்பதையும் செயற்குழு மற்றும் உறுப்பினர்களிடம் அவர் பகிர்ந்து கொண்டார். அதேசமயம் இந்த குடும்பதின ஒன்று கூடல் நிகழ்வுக்கு மிகவும் சிரத்தை எடுத்துக்கொண்ட தலைவர் ஜாஹிர் உசேன், செயலாளர் சபீர் அஹமது, பொருளாளர் முகம்மது நூருல் அமீன், துணைத் தலைவர் தமீம் நசீர் ஆகியோரையும், அவர்களுடன் இணைந்து செயல் பட்ட இதர செயல் வீரர்களையும் பெரிதும் பாராட்டினார்.

இது போன்ற நிகழ்வுகளை அடிக்கடி செய்யா விட்டாலும், குறைந்த பட்சம் மூன்று மாதமொரு முறையாவது செயற்குழு கூடி விவாதித்து, வருடமொருமுறை சிறப்பான முறையில் சிங்கையின் முக்கிய பிரமுகர்களைச் சிறப்பிக்க வேண்டும். எதிர்வரும் ஈதுப் பெருநாளுக்குப் பிறகு அதனைச் செய்ய வேண்டும். அதுமட்டுமின்றி இன்று கூடிய குடும்ப உறுப்பினர்கள் மட்டுமல்லாமல், கலந்து கொள்ள தவறிய இதர குடும்பங்களையும் கலந்து கொள்ள உற்சாகப் படுத்தவேண்டும் என்று தலைவர் ஜாஹிர் உசேன் கூறினார்.

விழாவில் கலந்து கொண்ட சிறுவர் சிறுமியர்களுக்கு ஓவியம், வண்ணம் தீட்டுதல், குறுக்கெழுத்துப் போட்டிகள் நடந்தன. வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்தும், பரிசுகளும், கலந்து கொண்ட இதர சிறுவர், சிறுமியர்களுக்கும் சிறப்புப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

சிற்றுண்டி, தேனீருடன் மாலையில் இனிமையான இனிய நினைவுகளுடன் இந்த குடும்பதின ஒன்று கூடல் நிகழ்வு ஒரு நிறைவை அடைந்தது.

# சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் SG50 பொன்விழா திட்டங்கள்

சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம் நாட்டின் SG50 பொன்விழா கொண்டாட்டத்தை முன்னிட்டு நான்கு நிகழ்ச்சிகளை நடத்த முடிவு செய்திருக்கிறது. அவற்றில் மற்ற சமூகத்தினரும் பங்கேற்பதற்குரிய ஏற்பாடு செய்யப்படும் என்று அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

புனித ரமலான் மாதத்தின் ஒரு வாரத்தில் பல்வேறு சமூகசேவைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். ரமலான் மாதத்தில் சிங்கப்பூரிலுள்ள 68 பள்ளிவாசல்களில் நோன்புக் கஞ்சி வினியோகிக்கப்படும். அப்போது முஸ்லிம் குடும்பங்கள் கூடுதலாகக் கஞ்சியைத் தயாரித்து முஸ்லிம் அல்லாத அண்டை வீட்டாருக்குக் கொடுப்பதற்கு ஊக்குவிக்கப்படுவார்கள்.

“கித்தா எக்ஸ்” எனும் நான்கு மாதத் திட்டமும் செயல்படுத்தப்படும். சிங்கப்பூரின் எதிர்காலம் அடுத்த 50 ஆண்டுகளில் எப்படி இருக்கும் என்பதை சுமார் 100 இளையர்கள் ஆராய்ந்து பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பார்கள். ஐந்து சிறந்த படைப்புகளுக்கு 5,000 வெள்ளி வரை நிதியுதவி கிடைக்கும்.




சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் கூட்டு தேசிய தினப் பற்றுறுதி நிகழ்ச்சி ஆகஸ்டு 8ஆம் நாள் நடைபெறும். பிடோக் விளையாட்டரங்கில் அந்த நிகழ்ச்சி இடம்பெறும் என்று முயிஸ் செயற்குழு உறுப்பினரும், “SG50 கிதா” குழு உறுப்பினருமான ராஜா முஹம்மது தெரிவித்தார். மலாய் மரபுடைமை நிலையத்தின் களிமண் சுவரில் ஓவியங்கள் வரையப்படும். வசதி குறைந்தவர்களுக்குத் தேவையான பொருட்கள் இலவசமாக வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

யூசுப் இஷாக் பேராசிரியர் கல்விமான் நிதி அரசாங்க மானிய உதவியுடன் உயர்த்தப்படும். 5 மில்லியன் வெள்ளிக்கு அதை உயர்த்துவது முஸ்லிம் சமூகத்தின் SG50 திட்டத்தில் அடங்கும். டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் 2014ஆம் ஆண்டு பெருநாள் கொண்டாட்ட விருந்தில் இதனை அறிவித்தார்.

# நாகூர் தர்கா இந்திய மரபுடைமை நிலைய கந்தூரி விழா

நாகூர் தர்கா இந்திய மரபுடைமை நிலையம் இந்த ஆண்டின் கந்தூரி விழாவை சிறப்பாகக் கொண்டாடியது. மார்ச் 21ல் கொடியேற்றமும், ஏப்ரல் 3 அன்று கந்தூரி விழாவும் நடைபெற்றன. ஆயிரத்துக்கு மேற்பட்டோர் அணிதிரண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

சிங்கப்பூர் தமிழ் இலக்கியப் பரிசு பெற்ற எழுத்தாளர் முஹம்மது காசிம் ஷாநவாஸ் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டிருந்தார். நாகூர் ஆண்டகையைச் சிறப்பிக்கும் மவ்லூது ஓதப்பட்டதைத் தொடர்ந்து சிங்கப்பூரின் பிரபலமான நூருல்ஹுதா இசைக்குழுவினர் தமிழ்முஸ்லிம் இசைப் பாடல்களை இசைத்து அனைவரையும் மகிழ்வித்தனர்.

சிங்கப்பூர் பல்கலைக் கழகங்களில் பட்டக்கல்வி பயிலும் இந்திய முஸ்லிம் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்க நாகூர் தர்கா மரபுடைமைக் கழக நிர்வாகக் குழு முடிவு செய்துள்ளது. சமுதாயத்திற்கு அவர்கள் தொடர்ந்து நற்பணியாற்றுவதை ஊக்கப்



படுத்தும் நோக்கில் இந்த நிகழ்ச்சியில் பல மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப் பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஓய்வுபெற்ற வெளியுறவுத் துணை அமைச்சருமான ஹாஜி ஜைனுல் ஆபிதீனும், நாகூர் தர்கா இந்திய மரபுடைமை நிலையத்தின் தலைவர் ஹாஜி எஸ்.எம். ஜலீலும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டனர். ஜும்மா தொழுகையுடன் கந்தூரி விழா நிறைவுபெற்றது.

# PHOTO NEWS

# படச் செய்திகள்



Grand Mufti of Egypt, Sheikh Dr. Shawki Allam and Prime Minister Lee Hsien Loong, 24-27 Jan 2015



Minister Dr. Yaacob and MUIS executives in Saudi Arabia for annual Haj Ministerial meeting, 6 Feb 2015




Progress Fund Madrasah Assistance Scheme (PROMAS) disbursement, 3 Mar 2015





First edition of Youth aLIVE discourse for 2015 at Al-Falah Mosque, 24 Apr 2015





Groundbreaking and Qiblah setting ceremony of Yusof Ishak Mosque, 7 Mar 2015



Completion of Addition & Alterations works at Moulana Mohamed Ali Mosque, 10 Apr 2015



Alkaff Mosque (Upper Serangoon) gazetted as 68th National Monument of Singapore, 16 Jan 2015



Al-Ansar Mosque re-opened with more facilities and additional 4,500 prayer spaces, 24 Apr 2015

# தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின் பவள விழா கொண்டாட்டம்

நமது சிங்கப்பூரில் 1940ஆம் ஆண்டு துவங்கப்பட்ட தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் அதன் 75ஆம் ஆண்டு பவள விழாவை சிறப்பாகக்கொண்டாடியது. அந்த விழாவின் அங்கமாக பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளை சங்கம் நடத்தியது.

உம்ரா பயணம் அவற்றில் ஒன்று, 2014 டிசம்பர் 9 முதல் 20 வரை சங்கத்தின் தலைவர் ஹாஜி ஹஸன் குத்தூஸ், செயலாளர் ஹாஜி முஹம்மது ஜாஃபர் ஆகியோர் தலைமையில் 36 பேர் புனித மக்கா, மதீனாவுக்குச் சென்று உம்ரா ஜியாரத் செய்து வந்தார்கள்.

### மவ்லூத் மஜ்லிஸ்

சங்கத்தின் சுப்ஹான மவ்லூத் நிகழ்ச்சி 2014 டிசம்பர் 22 முதல் 2015 ஜனவரி 2ஆம் தேதி வரை 12 தினங்கள் மஸ்ஜித் ஜாமியா சூலியாவில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அதில் ஒவ்வொரு நாளும் ஓர் இமாம், நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், மகத்தான வழிமுறைகளையும் எடுத்துரைத்தது அனைவருக்கும் பயன் மிக்கதாக இருந்தது.

### இரத்த தான முகாம்

சங்கம் 2015 ஜனவரி 18 அன்று இரத்த தான முகாமை நடத்தியது. அதில் பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள். 25 பேர் இரத்த தானம் வழங்கினார்கள்.

### மீலாத் விழா

பவள விழா ஆண்டின் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக மீலாத் விழா அமைந்தது. மஸ்ஜித் அல்முத்தகீன் பள்ளியில் 25-1-2015 அன்று நடைபெற்ற விழாவில் அல்மதரஸா நூருல் இஸ்லாம் மாணவர்கள் பல நிகழ்ச்சிகளைப் படைத்தார்கள். சிறந்த மாணவர்களுக்குப் பரிசுகளும் கேடயமும் வழங்கப்பட்டன.

### குடும்ப தினம்

தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் பிப்ரவரி முதல்நாள் காலை முதல் மாலை வரை குடும்ப தினத்தைக் கொண்டாடியது. பல குடும்பங்களைச் சேர்ந்த 120 பேர் விழாவில் கலந்து கொண்டனர். சங்கத் துணைத்தலைவர் ஹாஜி பஹ்ருதீன் தலைமையில் 3 பேருந்துகளில் அனைவரும் சுங்கை பூலோவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.




### சிறப்பு விருந்து

சங்கத்தின் பவள விழா விருந்துபசரிப்பு நிகழ்ச்சி 7-2-2015 மாலை ஆறு மணி முதல் இரவு 10 மணி வரை உலுபாண்டான் சமூக நிலையத்தில் ஹாஜி ஹஸன் குத்தூஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அதில் 500க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். துவக்கமாக மவுலவி ஹாஃபிழ் ஹஸன் அலி ஃபைஜி கிராஅத் ஓதினார். செயலாளர் ஹாஜி முஹம்மது ஜாஃபர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அதனைத் தொடர்ந்து மேஜிக் ஷோ, திக்கிர் பாராத் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

முஸ்லிம் விவகார அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். சங்கத்தின் முன்னாள் தலைவர்களுக்கும், பட்டம்பெற்ற முன்னோடி மாணவர்களுக்கும் அவர் கேடயங்களை வழங்கிச் சிறப்பித்தார்.

சங்கத்தின் 75ஆம் ஆண்டு நினைவுமலர் இவ்விழாவில் வெளியிடப்பட்டது. இவ்வாண்டு 75 வயதை அடைந்த மூத்தோருக்குச் சிறப்புப் பரிசும் வழங்கப்பட்டது. விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த அனைவருக்கும் துணைத் தலைவர் ஹாஜி பஹ்ருதீன் நன்றி கூறினார்.

## தொழிலதிபர் அப்துல் ஜலீலுக்கு அதிபர் சவால் திட்ட விருது

நன்கொடையாளரும், தொழிலதிபருமான முகம்மது அப்துல் ஜலீல் அவர்களுக்கு அதிபர் சவால் திட்டத்தின் தலைசிறந்த ஆதரவாளர் விருது வழங்கப்பட்டிருக்கிறது.

இஸ்தானா மாளிகையில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற அதிபர் சவால் திட்டத்தின் 15ஆம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தில் அதிபர் டோனி டான் இவ்விருதை வழங்கிச் சிறப்பித்தார்.

குடியரசின் ஆறாவது அதிபர் எஸ்.ஆர். நாதன் 15 ஆண்டுகளுக்கு முன் 2000ல் அதிபர் சவால் திட்டத்தைத் தொடங்கிவைத்தார். அதற்கு ஹாஜி எஸ்.எம்.அப்துல் ஜலீல் தமது மினி என்வைரன்மெண்ட் சர்வீஸ் நிறுவனத்தின் சார்பில் கணிசமான நன்கொடை வழங்கியுள்ளார். அதிபர் சவால் திட்ட செயற்குழுவிலும் அவர் அங்கம் வகித்து வருகிறார்.

இதுவரை அதிபர் சவால் நிதிக்கு 150 மில்லியன் வெள்ளி திரட்டப்பட்டு 500க்கு மேற்பட்ட நன்கொடை அமைப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதிபர் சவால் திட்டம், அடித்தள அமைப்புகள், குலமரபுச் சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு சமூக அமைப்புகள், பள்ளிகள் ஆகியவற்றைச் சென்றடையும் வண்ணம் விரிவுபடுத்தப்படும் என்று அதிபர் டோனி டான் இந்நிகழ்ச்சியில் தெரிவித்தார்.

## மதரஸா மாணவர்களுக்குச் சலுகை

முழுநேர மதரஸா மாணவர்கள் தேசியத் தேர்வுகளுக்கு இந்த ஆண்டின் தொடக்கத் திலிருந்து கட்டணம் செலுத்த வேண்டிய தில்லை.

அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் இந்தக் கட்டண விலக்குத்தகவலைத் தெரிவித்துள்ளார் அரசாங்க நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் சிங்கப்பூர் மாணவர்களுக்கு தேசியத் தேர்வுக் கட்டணத்திலிருந்து விலக்களிக்கப் படுவதாக துணைப் பிரதமரும், நிதியமைச்சருமான தர்மன் சண்முகரத்னம் அண்மையில் வெளியிட்ட வரவு செலவுத் திட்டத்தில் அறிவித்தார். அதனைத் தொடர்ந்து, முழுநேர மதரஸா மாணவர்களும் அவர்களில் அடங்குவர் என்று டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

தற்போது ஆறு முழுநேர மதரஸாக்கள் முஸ்லிம் சமூகத்தின் நிதியுதவியுடன் இயங்கி வருகின்றன. கலாசார, சமூக, இளையர் துறை அமைச்சு, சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றத்திற்கு உதவி வழங்குவதன் அடிப் படையில் முழுநேர மதரஸா மாணவர்கள் தேசியத் தேர்வுகளுக்குக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை என்றும் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் தெரிவித்தார்.

## புதிய பள்ளிவாசல்கள்

தெம்பனிஸ் நார்த்தில் புதிய பள்ளிவாசல் கட்டப்படவிருக்கிறது. முஸ்லிம் விவகாரங் களுக்குப் பொறுப்புவகிக்கும் அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் 12-3-2015 அன்று நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

தெம்பனிஸ் நார்த், பாசிர் ரிஸ் பகுதிகளில் புதிய வீடுகளைக் கட்டும் பணி முடிவடைந்திருப்பதால், அங்கு வசிப்பவர்களின் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் அந்தப் பள்ளிவாசல் கட்டப்படும் என்றார் அவர்.

அந்தப் பகுதியிலுள்ள தொழில் பேட்டைகளில் பணிபுரிவோரின் தேவைகளை அது நிறைவு செய்யும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். தெம்பனிஸ் நார்த் வட்டாரத்தில் 21,000 புதிய வீடுகள் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது

பொங்கோல், ஜுரோங், உட்லண்ட்ஸ் பகுதிகளில் அடுத்த இரண்டு ஆண்டுக்குள் மூன்று பள்ளிவாசல்கள் இயங்கவிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# தமிழ்மொழி மாதக்கொண்டாட்டத்தில் நமது சிறப்பு நிகழ்ச்சிகள்

## ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம்

தமிழ் மொழி விழாவின் ஓர் அங்கமாக, வளர்தமிழ் இயக்கத்தின் ஆதரவில், ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் (சிங்கப்பூர் கிளை), ஞாயிற்றுக்கிழமை 18-4-2015 அன்று மாலை 6:30 மணிக்கு, உமறுப்புலவர் தமிழ் மொழி நிலையத்தில், கவிஞர் மு. மேத்தாவின் "நட்சத்திர ஜன்னலில்" என்ற நிகழ்ச்சியை மிகச்சிறப்பாக நடத்தியது.

குறித்த நேரத்தில், சிங்கப்பூரின் தந்தை அமரர் லீ குவான் இயூ அவர்களுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் நிகழ்ச்சி துவங்கியது. தமிழ் வாழ்த்துப் பாடலைப் பாடினார், ராஃபிள்ஸ் பெண்கள் பள்ளியின் மாணவி செல்வி சிநேஹா முரளி. அவரைப் பாராட்டி, பரிசு வழங்கினார் கணிதப் பேராசிரியர் ஹாஜி அமானுல்லாஹ். திரு. லீ குவான் இயூ பற்றிய சிறப்புக் காணொளி காண்பிக்கப்பட்டது. தலைமையுரையும், வரவேற்புரையும் வழங்கிய சங்கத்தின் தலைவர், கணக்காய்வாளர் முனைவர் ஹாஜி முஹிய்யத்தீன் அப்துல் காதர், சிங்கைவாழ் தமிழர்கள் வீட்டிலும், நாட்டிலும் அதிக அளவில் தமிழில் பேச வேண்டும் என்றும், தமிழர்கள் சிங்கப்பூரில் மக்கள் தொகையிலும், சொந்தத் தொழில் செய்வதிலும், கல்வி மேம்பாட்டிலும் பெரிய வளர்ச்சிக் காண்பது அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட, சிங்கப்பூர் நாடாளுமன்ற நியமன உறுப்பினர் திரு. கி.கார்த்திகேயன் "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்ற பாரதிதாசனின் பாடலைப் பாடிப் பரவசப்படுத்தினார். தமிழர்கள் தமிழர்களைச் சந்திக்கும்பொழுது, தமிழில் பேசவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.





முனைவர் முஹிய்யத்தீன் அப்துல் காதர் எழுதிய "நாம் அன்னைத் தமிழை வாழ்த்திடவே ஒன்று கூடுவோம்" என்ற சிறப்புப் பாடலை, பாடகர் "ஆன்மீக இசைத் தென்றல்" ஜனாப் மு.அ.ஜெய்னுல் ஆபிதீன் சிறப்பாகப் பாட "தமிழை நேசிப்போம்; தமிழில் பேசுவோம்" என்ற பாடல் வரிகளை, சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் மேடையில் சேர்ந்து பாடிய விதம், அரங்கம் முழுவதும் தமிழ் மணம் பரப்பியது. பாடகருக்கு, சங்கத்தின் துணைத்தலைவர் ஜனாப் கலந்தர் மொஹிதீன் பொன்னாடைப் போர்த்தி கௌரவித்தார்.

சிங்கப்பூரில் தமிழ் வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்த மூத்த எழுத்தாளர் ஜே.எம்.சாலி, ஆசியான் கவிஞர் க.து.மு.இக்பால், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் தலைவர் நா.ஆண்டியப்பன், தமிழாசிரியர் மு.அ.மசூது, ஜமால் முஹம்மது கல்லூரியின் முன்னாள் மாணவர் எழுத்தாளர் ஷாநவாஸ் ஆகியோருக்கு, அவர்களின் தமிழ்ப்பணியைப் பாராட்டி, "ஜமாலியன் விருது" வழங்கப்பட்டது.

சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்ட தமிழ்துறைப் பேராசிரியரும், "புதுக்கவிதையின் தாத்தா" என்று அழைக்கப்படுபவருமான கவிஞர் மு.மேத்தா, பாடல்கள் எழுதிய அனுபவங்கள், மற்ற கவிஞர்களின் தமிழ் ஆற்றல், பாரதிதாசனின் ஒப்பற்ற வரிகளை குறிப்பிட்டு இலக்கிய உரை நிகழ்த்தினார். தமிழ் மொழி விழாமல் இருப்பதற்கு ஒரு மாதம் முழுவதும் விழா எடுக்கும் வளர்தமிழ் இயக்கத்தை அவர்

பாராட்டினார். "நம் எல்லோருக்கும் தாய் நாடு உண்டு. ஆனால், அமரர் லீ குவான் இயூ ஒரு தேசத்தின் தாய்" என்று புகழாரம் சூட்டினார். "நட்சத்திர ஜன்னலில் வழியாக வானம்தான் சிங்கப்பூரை எட்டிப் பார்க்குது; வியக்குது; மலைக்குது; மகிழுது" என்று வர்ணித்தார். நிகழ்ச்சியை சிறப்பாக வழிநடத்தினார், சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் ஃபரீஜ் முஹம்மது. சங்கத்தின் செயலாளர் அப்துல் சுபஹான் நன்றி கூறினார். இரவு மணி 8:30க்கு நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

## சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக்

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் தமிழ்மொழி மாதத்தின் ஒரு சிறப்பு அங்கமாக உமறுப்புலவர் நினைவு அரங்கம் நிகழ்ச்சியை நடத்தியது.

சிங்கப்பூர் தமிழ்க்கல்வி வரலாற்றில் சாதனையையும், சகாப்தத்தையும் நிகழ்த்திய உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியின்



நினைவாக 18-4-2015 சனிக்கிழமை இந்த விழா நடைபெற்றது.

உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளி தற்சமயம் இல்லாவிட்டாலும், அப்பள்ளியின் நினைவாக உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம், உமறுப்புலவர் கல்வி உதவி அறக்கட்டளை, உமறுப்புலவர் தமிழ்ப்பள்ளி முன்னாள் மாணவர் சங்கம் ஆகியவை இப்பொழுது சிறப்பாக இயங்கிவருவதை சங்கத்தின் செயலாளர் மு.அ.மசூது குறிப்பிட்டார்.

சிங்கப்பூரின் தமிழ்மொழி வளர்ச்சிக்காக அரும்பணி ஆற்றிய உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளியின் நினைவாகவும்,



பள்ளியை நிறுவ அரும் பாடுபட்ட பெரியவர் அ.நா.மெய்தீனின் நினைவாகவும் தமிழ்ப்பணியும், சமூகப் பணியும் புரிந்து வருபவர்களுக்கு விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது,

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சுகாதாரம் மற்றும் போக்குவரத்து அமைச்சின் நாடாளுமன்றச் செயலாளர் இணைப் பேராசிரியர் டாக்டர் முஹம்மது ஃபைசல் இப்ராஹிம் தமது உரையைத் தொடர்ந்து அந்த விருதுகளை சங்கத்தின் தலைவர் ஹாஜி நசீர் கனி முன்னிலையில் வழங்கினார்.

சிங்கப்பூர் நாடாளுமன்ற மொழி பெயர்ப்பாளர் திரு. அ.பழனியப்பனும், சிங்கப்பூர் ஜாமியாவின் துணைத் தலைவர் ஹாஜி H.M.சலீமும் அ.நா.மெய்தீன் நினைவு விருதைப் பெற்றனர். தமிழமொழி பண்பாட்டுக் கழகத்தின் தலைவர் திரு. ஹரி கிருஷ்ணன் உமறுப்புலவர் விருதைப் பெற்றார்.

தமிழ் முஸ்லிம்கள் தங்களது தாய்மொழியான தமிழையும், மரபுகளையும் எவ்வாறு பேணி வளர்த்தார்கள், பலஇன சமுதாயத்தில் சமய நல்லிணக்கத்திற்கு எவ்வாறு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்கள் என்பதை விளக்குகின்ற ஒரு குறும்படம் திரையிடப்பட்டது. கோம்பை எஸ்.அன்வர் "யாதும்" எனும் இக்குறும்படத்தை இயக்கியவர். இப்படத்தை தயாரித்ததன் நோக்கத்தை அவர் சுருக்கமாக எடுத்துரைத்தார்.

தமிழ் நாட்டிலிருந்து அழைக்கப் பட்டிருந்த அவரும், உத்தமபாளையம் கருத்த ராவுத்தர் கல்லூரியின் இணைப் பேராசிரியர் முஹம்மது ரஃபீக் ராஜா முஹம்மதுவும் உரையாற்றி அரங்கை மகிழ்வித்தனர். 'நமது தமிழ் இனி நமது இளையர்களின் கரங்களில்' என்று முழங்கினார், முஹம்மது ரஃபீக்.

# இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீஃபா மறைவு

சிங்கப்பூர் நன்கறிந்த இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீஃபா அவர்கள் 8-4-2015 அன்று இரவு, சென்னையில் உயிர்துறந்தார். அவருக்கு வயது 90.

இசைமுரசு, கலைமாமணி இ.எம். ஹனீஃபா சிங்கப்பூருக்கும், தென் கிழக்காசிய நாடுகளுக்கும் பலமுறை வருகையளித்து இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்று அனைவரின் அன்பையும், பாராட்டு விருதுகளையும் பெற்றிருக்கிறார். 2002ஆம் ஆண்டிலும், 2006 செப்டம்பர் மாதத்திலும் அவர் சிங்கப்பூருக்கு வருகையளித்ததை அறிவோம்.

அரசியலிலும் அவர் ஈடுபட்டிருந்தார். தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், வக்ஃபு வாரியத் தலைவராகவும் இருந்தார். இசைமுரசு அவர்கள் 2002ஆம் ஆண்டு குடியரசுக்கு வருகையளித்தபோது தமிழவேள் நற்பணி மன்றம் 'இசைவாணர்' எனும் பட்டத்தை வழங்கி பெருமைப்படுத்தியது.

10-9-2006 அன்று பென்கூலன் பள்ளிவாசல் பன்னோக்கு அரங்கில் நடத்தப்பட்ட பாராட்டுவிழா மறக்கமுடியாதது. சிங்கப்பூர் தமிழ் முஸ்லிம் நற்பணிக் குழு, தொழிலதிபர் ஹாஜி எஸ்.எம்.அப்துல் ஜலீல் தலைமையில் அதனை நடத்தியது. 'இஸ்லாமிய இன்னிசைச்செல்வம்' என்ற பட்டம் அப்போது அவருக்கு வழங்கப்பட்டது.

பாராட்டு விழாவைத் தொடர்ந்து ஹனீஃபா அவர்கள் தம் குழுவினருடன் இன்னிசை விருந்து படைத்து அனைவரையும் மகிழ்வித்தார்.

அவர் இசைத்த எண்ணற்ற பாடல்களை மறக்கமுடியுமா?

"இறைவனிடம் கையேந்துங்கள்" என்ற பாடல் வரிகள் பலருக்கும் மனப்பாடம்.

"அல்லல் படும் மாந்தர்களே அயராதீர்கள் அல்லாஹ்வின் பேரருளை நம்பி நில்லுங்கள்" என்ற இசைப் பாடல் என்றென்றும் எதிரொலிக்கக் கூடியது.



"கோமானே! சீமானே"
அருள் மழை பொழிவாய்
ரகுமானே!

"எங்கும் நிறைந்தோனே
இருகரம் ஏந்துகிறேன்
அல்லாஹ்
சங்கை மிகுந்தோனே
சஞ்சலம் தீர்த்திடு யா அல்லாஹ்!
உன்னையன்றி யார்தான் எனக்கு உதவிடுவார்
அல்லாஹ்!
என்றும் அவர் பாடினார்

"காண கண் கோடி வேண்டும் காபாவை" என்ற பாடல், ஹஜ் கடமையின் மாண்புகளை கண் முன் காட்சிப் படுத்துகிறது.

தமிழ் மீது தீராத பற்று கொண்ட இசை முரசு பாடிய "பாண்டியர் ஊஞ்சலில் ஆடி வளர்ந்த பைந்தமிழ் அணங்கே!" என்ற பாடல் தமிழ் மொழியின் சிறப்பை விளக்கும்.

ஹனீஃபா அவர்கள் பலரின் வேண்டுகோளை ஏற்று ஓரிரு திரைப்படங்களில் மட்டும் பாடினார். பாவமன்னிப்பு என்ற படத்தில் "எல்லோரும் கொண்டாடுவோம்" என்ற பாடலின் தொடக்கத்தில் இசை முரசு அவர்கள் முழங்கும் பாங்கொலி, பிற சமயத்தினரையும் கவர்ந்தது.

சிங்கப்பூர் நாகூர் சங்கமும், சில நிறுவனங்களும் இசைமுரசு அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து பள்ளிவாசல் களில் ஜனாஸா தொழுகையும், சிறப்புப் பிரார்த்தனையும் நடத்தின.

"நாகூருக்குப் பெருமை சேர்த்த எங்களின் இசைமுரசு நாகூர் இ.எம்.ஹனீஃபா அவர்களின் நல்லுடல் 9-4-2015 வியாழன் பிற்பகல் 4 மணிக்கு நாகூரில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். மர்ஹூம் அவர்களின் மறுமை வாழ்வு சிறக்க துஆ செய்கிறோம்" என நாகூர் சங்கம் அதன் அறிக்கையில் தெரிவித்தது.